# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
************

அசல் மனு எண்: 1269 / 2016/ பல்வகை
ஆணை எண்: 202 / 2016
நாள்: 19 /12 /2016

எம் சிவப்பிரகாசம்,
த/பெ. முனு சாமி,
க.எண்.23, இந்து காலனி, உள்ளகரம்.
சென்னை-91

முறையீட்டு மனுதாரர்.

மேத்யூ வர்கீஸ்,
6/12,11– வது குறுக்குத் தெரு,
சாஸ்திரி நகர், அடையாறு.
சென்னை 20

எதிர் மனுதாரர்.

ஆணை:

சென்னை மாவட்டம், இந்துகாலனி, உள்ளகரம், சென்னையைச் சேர்ந்த திரு எம். சிவப்பிரகாசம் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவத்திற்கு தாக்கல் செய்த முறையீட்டு மனு 9.12.16 அன்று பெறப்பட்டது. முறையீட்டு மனுதாரர் அவருடைய மனுவில், தனக்கு பொது அதிகாரம் வழங்கிய முருகேசன் வகையராவிற்குச் சொந்தமான 62 செண்ட் நிலத்தை திரு. மேத்யூ வர்கிஸ் என்பவரிடமிருந்து மீட்டுத் தரக்கோரி சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர், சேப்பாக்கம் அவர்களுக்கு சீராய்வு மனு அனுப்பியதாகவும், ஆனால் அவரிடமிருந்து எவ்வித அழைப்பாணையும் வரவில்லையெனத் தெரிவித்து, போலி ஆவணங்கள் மூலம், ஆள் மாறாட்டம் செய்து நிலங்களை அபகரிக்க முயலும் மேத்யூ வர்கிஸ் மீது நடவடிக்கை எடுத்து, 1972 மற்றும் 1974 ல் உள்ள இரண்டு போலி ஆவணங்களை ரத்து செய்து, அவர்களுக்கு சேரவேண்டிய 62 செண்ட் நிலத்தை அவர்கள் பெயரில் வருவாய்ப் பதிவேட்டில் பதிவு செய்து, பட்டா பெயர் மாற்றம் செய்யக் கோரியுள்ளார்.

–2–

2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 2, உட்பிரிவு (10) ன் படி "முறைமன்ற நடுவர்" என்றால் உள்ளாட்சி அமைப்புகளால் அல்லது உள்ளாட்சி அமைப்புகளின் கீழ் பணியாற்றிக் கொண்டிருக்கும் பொதுப் பணியாளர்களால் தொடர்புடைய சட்டத்தின் வகை முறைகளுக்கிணங்க நிர்வாக செயற்பணிகளைச் செய்து முடிக்கையில் செய்யப்படும் ஊழல் அல்லது சீர்கேடான நிர்வாகம் அல்லது முறைகேடுகள் எதன் பேரிலுமான குற்றச்சாட்டுகள் தொடர்பான விசாரணை செய்வதற்கான அல்லது அத்தகைய முறையீட்டை தீர்வு செய்வதற்கான அதிகார அமைப்பாகும். எனவே இம்முறைமன்றத்தால் வருவாய் துறைச் சார்ந்த குற்றச்சாட்டுகள் மீது விசாரணை செய்ய இயலாது என முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2016 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 19 ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

..//ஒப்பம்//..

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

மு. பழனிவேல்

உதவிப்பதிவாளர்

20/12/16

பெறுநர்

திரு.எம். சிவப்பிரகாசம்,
த/பெ. முனு சாமி,
எண்.23, இந்து காலனி 2 வது பிரதான சாலை,
உள்ளகரம், சென்னை.600 091.